

# அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்,

திருவாரூர்.



## திருக்கோயில், தேர் மற்றும் திருக்குளம் திருப்பணி கலந்தாய்வு ஆலோசனை கூட்டம்

## அழைப்பிதழ்

பேரன்புடையீர்,

தென்னாடுடைய சிவனே போற்றி !
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி !

- என நாவுக்கரசரால் சிறப்பிக்கப்பெற்றது.

போற்றப்படும் பரம்பொருள் அருள்மிகு தியாகேசப் பெருமான் ஆவார்.

தென்னகத்தில் தேர் என்றால் அது ஆரூர்த் தேரைத்தான் குறிக்கும்.
" ஆழித்தேர் வித்தகனை யான்கண்ட ஆரூரே "

- என மாணிக்கவாசகரால் சிறப்பிக்கப்பெற்று

tnhrce.org

சைவ சமய மரபில் பெரியகோவில் என்றும் பூங்கோயில் எனவும் வழங்கப்படுகிறது. தேவாசிரியம் எனும் திருக்காவணத்தில் (ஆயிரங்கால் மண்டபம்) சைவ சமயச் சான்றோர்கள் கூடி எடுக்கும் முடிவு உலகெங்குமுள்ள சைவ சமயத்தினரையும் கட்டுப்படுத்தும் என்பதால் இது சைவ சமயத்தின் தலைமைப் பீடமாகவும் திகழ்கிறது.

இங்குள்ள மூலவர் வன்மீகநாதர் என வடமொழியிலும், புற்றிடங்கொண்ட பெருமான் எனத் தமிழ் மொழியிலும் அழைக்கப்படுகின்றார். இத்திருத்தலம் சைவத்தலங்களில் முதன்மையானதாகவும், சப்தவிடங்கத்தலங்களில் மூலாதாரத்தலமாகவும், பஞ்சபூத ஸ்தலங்களில் பிருதிவி (பூமி) த்தலமாகவும் விளங்குகிறது.

இத்தகைய பெருமை வாய்ந்த இத்திருக்கோயில், தேர் மற்றும் கமலாலய திருக்குள திருப்பணிக்கு கலந்தாய்வு ஆலோசனை கூட்டம் எதிர்வரும் **19.11.2012 திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில்** இத்திருக்கோயில் தேவாசிரிய மண்டபத்தில் நடைபெறுவதால் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் ஆகிய தாங்கள் அனைவரும் இத்திருப்பணி ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது நல் ஆலோசனைகளையும் உரிய பங்களிப்பினையும் தெரிவித்து திருப்பணி வேலைகள் சிறப்பாக இனிதே நடைபெற நல் ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**திருக்கோயில் நிர்வாகம்**